[1981 மார்ச் 24

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர் மாற்றப்பட்ட வுடன் ஏன் அந்த இடத்தில் வேறொரு உதவியாளர் பதிவியை ஏற்று வேலை செய்யவில்லை என்று கேட்டார்கள். பல கிளை நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருந்து வருகின்றன. (சிரிப்பு) நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஏன் சிரிக்க வேண்டும்? நான் இன்னும் பதிலை முடிக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க அரசு ஆவன செய்து வருகிறது. அத்துடன் 'புல் ஸ்டேஷனி'ல் அதிகப்படியாக உள்ள கால்நடை ஆய்வாளர்களைத் திரும்பப் பெற்றுக் காலியாக உள்ள கிளை நிலையங்களிலே அமர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, காலியாக உள்ள கிளை நிலையங்களில் விரைவில் ஆய்வாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கால்நடை மருத்துவமனைகளில் அலுவலர்கள் இல்லாததால் பல ஊர்களில், குறிப்பாக எங்கள் பகுதியில் விருத்தாசலம் பகுதியில் ஒரு ஊரிலே இதைப்போலவே மூடப்பட்டிருக்கிறது. கோபாலபுரம் என்ற இடத்திலே மூன்று மாதங்களுக்கு மேலாக கால்நடை ஆய்வாளர்கள் இல்லாததால் மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள கால்நடைகள் கோமாரி போன்ற பல நோய்களால் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றன. இது அமைச்சவரர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை ஆய்வாளர்கள் அதிக எண்ணிக்கையில் இம்மாத காரணத்தினால்தான் மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க ஆவன செய்து வருவதாக ஏற்கனவே ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறியிருக்கிறேன். அடுத்து, கோமாரி நோய் பற்றிக் கூறிப்பிட்டார்கள், அந்த இடத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை; தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை.

*வினா எண் 471—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்கா வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் ஏதேனும் உண்டா?

(ஆ) அத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும்?

1981 மார்ச் 24]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

(அ) கோட்டையிலுள்ள முதலமைச்சரின் அறை தனியார் ஒருவரால் நாசம் செய்யப் பெற்றுள்ளது.

திரு. ரா. உமாநாத்: துணைத் தலைவரவர்களே, இந்த அவையினுடைய செக்யூரிட்டி சம்பந்தமாகவும், முதலமைச்சருடைய செக்யூரிட்டி சம்பந்தமாகவும் அவசரமாக இந்த அவைக்கு அவைததலைவரவர்கள்ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் நேரத்திற்கு முன்னால்தான் எனக்குத் தகவல் கிடைத்து, நான் மேலே போய்ப் பார்த்தேன். முதலமைச்சருடைய ஆபீஸ் பூர்ணமாக நொறுக்கப்பட்டிருக்கிறது. அது, சித்தரிப்பதற்கு முடியாத அளவிற்கு கம்ப்ளீட்டாக ransack பண்ணி அது நடந்திருக்கிறது. அவருடைய லைப்க்கு நிச்சயமாக ஆபத்து உண்டு என்பது நிச்சயம். இந்த அவைக் கட்டிடத்திற்குள்ளே அது நடக்கிற பொழுது இந்த அவையினுடைய செக்யூரிட்டிக்கும் நிச்சயமாக அதிலே security implications உண்டு யாராவது ஒருவர் அங்கே நுழையலாம் என்பது ஆகிவிட்டது, இந்த அளவிற்குச் செய்வதற்கு, That means ஒரு time explosive device கூட, அதற்குள்ளே ஒரு டைம்பாம் கூட வைக்கலாம். அந்த மாதிரி வைக்கலாம் அங்கே தெரியாமல் வைத்தாகிவிட்டது என்று சொன்னால், அதேமாதிரி அப்படி ஒரு டிவைஸ் ஒன்றை இங்கே வைக்க முடியும். நாம் யாரும் இல்லாத நேரத்திலே என்று சொன்னால், whole house-க்கு விசிட்டர்ஸ் உள்பட அவ்வளவு சீரியஸான பிரச்னை, இம்ப்ளிகேஷன்ஸ் ஏற்பட்டு இருக்கிறது. உடனே அறிக்கை கொடுக்கவில்லையென்று சொன்னால், பல Misunderstandings மாநிலம் பூராவும் வரும். அந்தக் கட்சி செய்ததா? இந்தக் கட்சி செய்ததா? என்று So many problems வரும். அந்தப் பிரச்னைகளுக்கும், சந்தேகத்திற்கும் இடம் இல்லாத நிலைமை உண்டாக்க வேண்டும். பதட்டம் தணிய வேண்டுமென்பதற்காக அவை முன்னவர் தயவு செய்து—எங்களுடைய கவலை பூராவும் நாங்கள் தெரிவிக்கிறோம்—அது சம்பந்தமாக அவசரமாக ஒரு அறிக்கை கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.